30th July 1962]

மீனவர் கூட்டுறவு சங்கங்களுக்குச் சலுகைகள்

** 817 கேள்வி.—திரு. எம் எஸ். செல்வராஜன் :* கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மீனவர் கூட்டுறவு சங்கங்களுக்கு ஆங்காங்குள்ள சர்க்கார் தரப்பில் விடப்படும் மீன்பிடி குத்தகைகளில் என்னென்ன சலுகைகள் காட்டப்படுகின்றன ?

THE HON. SRI N. NELLASENAPATHI SARKARAI MANRADIAR : At present there are no special concessions shown to Fishermen Co-operative Societies in the matter of leasing out of fishery rights. The Government have, however, decided to lease out the fishery rights in Inland Waters to the Fishermen Co-operative Societies during 1963 and 1964 on the average of the auction bid amounts of 1961 and 1962.

தொழிற்சாலைகளும் தோட்டக் காடுகளும் (தேசியமயமாக்குதல்)

** 818 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா :* கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நமது ராஜ்யத்திலுள்ள அன்னியர்களுக்கு சொந்தமான தொழிற்சாலைகளையும் தோட்டக் காடுகளையும் தேசியமயமாக்க வேண்டுமென்று மத்திய சர்க்கார் நமது சர்க்காரைக் கேட்டுள்ளார்களா ?

(இ) நமது சர்க்காரின் அபிப்பிராயமென்ன ?

THE HON. SRI R. VENKATARAMAN : (அ) No, Sir.

(இ) Does not arise.

செமண்ட் (உற்பத்தி)

** 819 கேள்வி—திரு. வை. சங்கரன் (திரு. அ. பெ தர்மலிங்கம் அவர்கள் சார்பாக) :* கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் செமெண்டின் அளவு எவ்வளவு ?

THE HON. SRI R. VENKATARAMAN : The production of cement in Madras State in 1961–62 was 12.34.446 tonnes

திரு வை. சங்கரன் : நமது நாட்டின் தேவை எவ்வளவு இதிலிருந்து நமது தேவைக்காக எவ்வளவு எடுத்துக்கொள்ளப்படுகிறது ? பிற ராஜ்யங்களுக்கு எவ்வளவு அனுப்பப்படுகிறது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நமக்கு வருவதில் ஏறக்குறைய 50 சத விகிதம் நம்முடைய மாகாணத்திற்கு ஒதுக்கப்படுகிறது.